15 வகையான திட்டங்களில் ஒன்றுகூட அறிவிக்கப்படவில்லை

தமிழக வேளாண் பட்ஜெட் பெருத்த ஏமாற்றம்

விவசாயிகள் கருத்து

● மதுரை

சட்டப்பேரவையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று தாக்கல் செய்த தமிழக அரசின் வேளாண் பட்ஜெட்டில், விவசாய மேம்பாட்டுக்கான திட்டங்கள் ஒன்றுகூட அறிவிக்கப்படாதது பெருத்த ஏமாற்றம் அளிப்பதாக, மதுரை மாவட்ட விவசாயிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பெரியாறு வைகை திருமங்கலம் பாசனக் கால்வாய் திட்ட தலைவர் எம்.பி.ராமன் கூறியதாவது:

மத்திய அரசு வேளாண் திட்டங்களுக்கு வழங்கும் நிதியை, மாநில அரசு வழங்குவதுபோல் திட்டங்களை அறிவித்துள்ளனர். நூறு நாள் வேலை திட்டத்தில் வழங்கப்படும் நிதியின் மூலம், கிராமப்புற கலைஞர் மேம்பாட்டுத் திட்டத்தில் ஏரிகள், பண்ணைக்குட்டைகள் அமைக்கவும், தூர்வாரப்படும் எனவும் அறிவித்துள்ளனர். ஏற்கெனவே, தேர்தல் வாக்குறுதிகளையே திமுக அரசு இன்னும் நிறைவேற்றவில்லை.

வேளாண் பட்ஜெட் தொடர்பாக அமைச்சர் விவசாயிகளின் கருத்துகளை கேட்டறிந்தபோது, மதுரை பகுதியில் விவசாய மேம்பாட்டுக்கு 15 வகையான திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்கினோம். அதில் ஒன்றுகூட அறிவிப்பில் இல்லை.

என்.பழனிச்சாமி எம்.பி.ராமன்

மதுரை மல்லிகை விவசாயிகளின் நலன் கருதி, குளிர்பதனக் கிடங்குகள், மல்லிகைப்பூச்செண்டு தொழிற்சாலை அமைப்பது குறித்து அறிவிப்பில்லை.

வைகை அணையில் 20 அடிக்கு மேல்வண்டல்மண் படிந்திருப்பதை தூர்வாரி ஆழப்படுத்த வேண்டும்என்றகோரிக்கையும்நிறைவேற்றப்படவில்லை. இதுபோன்று பல திட்டங்கள் அறிவிக்கப்படும் என எதிர்பார்த்திருந்தோம். ஆனால், விவசாயிகள் பலனடையும் வகையில் எந்தத் திட்டமும் அறிவிக்கப்படாததால், தென் மாவட்ட விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

மேலும், நிலங்களை காக்க போராடிய விவசாயிகளை குண்டர் சட்டத்தில் கைது செய்த திமுக அரசின் பட்ஜெட், விவசாயிகளின் உரிமைகளைப் பறிக்கும் பட்ஜெட் ஆக உள்ளது.

தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் என்.பழனிச்சாமி கூறியதாவது:

கரும்புக்கு மத்திய, மாநில அரசுகளின் பரிந்துரை விலை கிடைத்து வந்தது. இதை கடந்த அதிமுக அரசு ரத்து செய்தது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மாநில அரசின் பரிந்துரை விலை வழங்குவோம் என திமுக தேர்தல் வாக்குறுதி அளித்தது. ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் பரிந்துரை விலைக்கு பதிலாக ஊக்கத் தொகையாக டன்னுக்கு ரூ.195 மட்டுமே வழங்கினர்.

தற்போது, அதில் ரூ.20 கூடுதலாக சேர்த்து ரூ.215 வழங்கவுள்ளனர். ஆனால், மற்ற மாநிலங்களில் மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து டன்னுக்கு ரூ.3,800 வழங்குகின்றனர். தமிழக அரசு ஊக்கத்தொகையையும் சேர்த்து ரூ.3,050 மட்டுமே வழங்குகிறது.

இது கரும்பு விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது. மேலும், அலங்காநல்லூர், மயிலாடுதுறையில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் திறப்பது குறித்து அறிவிக்காதது பெருத்த ஏமாற்றம். இதற்கு, சட்டப்பேரவை பதிலுரையிலாவது தமிழக முதல்வர் நல்ல முடிவுகளை அறிவிப்பார் என எதிர்பார்க்கிறோம். என்றார்.

ஊரக திறனாய்வு தேர்வில் வென்ற மாணவர்களுக்கு பாராட்டு

● மதுரை

ஊரக திறனாய்வுத் தேர்வில் வென்ற இளமனூர் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி மாணவர்களை ஆசிரியர்கள் பாராட்டினர்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 9-ம் வகுப்பு படிக்கும் கிராமப்புற மாணவர்களை ஊக்குவிப்பதற்காக, ஊரகத் திறனாய்வு தேர்வு திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு 9-ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை ஆண்டுக்கு ரூ.1,000 வழங்கப்படுகிறது. மாவட்ட அளவில் 113 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

அதன்படி, தற்போது நடந்த ஊரகத் திறனாய்வுத் தேர்வில் மதுரை இளமனூர் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் 9-ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் கோவர்த்தனன், கமலக்கண்ணன் ஆகிய இருவர் வெற்றி பெற்றனர். இம் மாணவர்களை, உதவி தலைமை ஆசிரியர்கள் சண்முகவேலு, தேவி, ஆசிரியர் மகேந்திரபாபு, உடற்கல்வி ஆசிரியர் முத்துராசா ஆகியோர் பாராட்டினர்.

மதுரையில் நடந்த மதிமுக தேர்தல் நிதியளிப்பு விழாவில் மதுரை மண்டலம் சார்பில், துரை வைகோவிடம் நிதியை பூமிநாதன் எம்எல்ஏ, மாநகர மாவட்ட செயலாளர் முனியசாமி, புறநகர் மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்டோர் வழங்கினர். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி.

மக்களுக்கு பாஜக அரசு மீது அவநம்பிக்கை

மதிமுக நிதியளிப்பு கூட்டத்தில் துரை வைகோ கருத்து

● மதுரை

விவசாயிகள், மாணவர்கள், பெண்கள் மற்றும் பொதுமக்களுக்கு பாஜக அரசு மீது அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது என, மதுரையில் மதிமுக முதன்மைச் செயலாளர் துரை வைகோ தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, மதுரை மாநகர், புறநகர் வடக்கு, தெற்கு, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்கள் அடங்கிய மதுரை மண்டல மதிமுக சார்பில் தேர்தல் நிதியளிப்பு கூட்டம், மதுரையில் நேற்று நடந்தது. இதில் கட்சியின் முதன்மைச் செயலாளர் துரை வைகோ பங்கேற்று நிதியை பெற்றார். முன்னதாக, அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அயோத்தி ராமர் கோயிலை பெரிதாகக் காட்டி, மக்களை திசை திருப்பி தேர்தலை சந்திக்க பாஜக முயற்சிக்கிறது. பெட்ரோல், டீசல் விலை குறைப்பு போன்ற தேர்தல் வாக்குறுதிகளை மத்திய அரசு நிறைவேற்றவில்லை. விவசாயிகளுக்கு எதுவும் செய்யவில்லை. மீண்டும் டெல்லியில் போராடும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

விவசாயிகள், மாணவர்கள், பெண்கள் உள்ளிட்ட அனைவருக்குமே பாஜக அரசு மீது அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

பல்வேறு நிதி இழப்புகளை சந்திக்கும் சூழலிலும் சிறப்பான நிதிநிலை அறிக்கையை, தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ளது. இதை தேர்தலுக்கான அறிக்கை எனக் கூற முடியாது.

தமிழகத்தில் 39 தொகுதிகளிலும் திமுக கூட்டணி வெற்றி பெறும். தேர்தலுக்கான கூட்டணி பேச்சு சுமுகமாகவே உள்ளது. இந்த முறை மக்களவைக்கு கூடுதலான தொகுதிகளை கேட்டிருக்கிறோம்.

விருதுநகர் தொகுதியில் நான் போட்டியிடவேண்டும் என கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் விரும்புகின்றனர். எனக்கு தேர்தலில் போட்டியிட விருப்பம் இல்லை என்றாலும், கட்சியின் முடிவுக்கு கட்டுப்பட்டு தானே ஆகவேண்டும்.

வாக்குச்சீட்டு முறையை அமல்படுத்த வலியுறுத்தி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில், பிப். 23-ல் நடக்கும் ஆர்ப்பாட்டத்துக்கு முழு ஆதரவளிக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இக்கூட்டத்தில், பூமிநாதன் எம்எல்ஏ, மதுரை மாநகர மாவட்டச் செயலாளர் முனியசாமி, புறநகர் மாவட்டச் செயலாளர்கள் மார்நாடு, ஜெயராமன் மற்றும் தேனி, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டச் செயலாளர்கள், மாநிலப் பொருளாளர் செந்தில் அதிபன், மாநில தொழிற்சங்க நிர்வாகி மகபூப்ஜான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விஏஓ உட்பட 5 பேர் மீது வழக்கு

● சிவகங்கை

மதுரை பழங்காநத்ததைச் சேர்ந்தவர் கயிலைநாதன் (52). இவரது சகோதரர் சேதுநாதன் (62) சென்னை வளசரவாக்கத்தில் உள்ளார். இவர்களது பூர்வீக சொத்து சிவகங்கை அருகே அரசனி பகுதியில் உள்ளது. இந்நிலையில் சேதுநாதன் தனது சகோதரர்களுக்கு தெரியாமல் போலி ஆவணம் தயாரித்து அந்த இடத்தை தனது மகள் ஐஸ்வர்யா (30) பெயருக்கு பத்திரம் பதிவு செய்து கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து கயிலைநாதன் அளித்த புகாரின்பேரில் சேதுநாதன், அவரது மகள் ஐஸ்வர்யா மற்றும் உடந்தையாக இருந்த அரசனி கிராம நிர்வாக அலுவலர் கார்த்தி உட்பட 5 பேர் மீது சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

மதுரையில் 'கன்ஸ்ட்ரக்டிவ்-2024' கட்டுமான பொருட்கள் கண்காட்சி

பிப். 23-ல் தொடங்குகிறது

● மதுரை

மதுரை ராஜா முத்தையா மன்றத்தில், பிஸினஸ் இந்தியா கண்காட்சி நிறுவனம் சார்பில், 'கன்ஸ்ட்ரக்டிவ் -2024' என்ற பெயரில் கட்டுமானப் பொருட்கள், பர்னிச்சர்களுக்கான கண்காட்சி பிப்.23 முதல் 25-ம் தேதி வரை நடக்கிறது.

இதில் கட்டிட, கட்டுமானப் பொருட்கள் மற்றும் வீடு, அலுவலகங்களுக்கு தேவையான உள், வெளி அலங்காரப் பொருட்கள், அழகிய நவீன டைல்ஸ்கள், மார்பிள்ஸ், கிரானைட்கள், பிளைவுட் மற்றும் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய லேமினேஷன் செய்த மரச்சாமான்கள் உள்ளிட்ட நவீன கட்டுமானப் பொருட்கள் மற்றும் அபார்ட்மெண்ட், ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் என ஏராளமான அரங்குகள் கண்காட்சியில் இடம் பெறுகின்றன.

இக்கண்காட்சியை, பொதுமக்கள், புதிய வீடுகள் கட்ட திட்டமிடுவோர், ஆர்க்கிடெக்ட்கள், பில்டர்கள், இன்டீரியர் டெக்கரேட்டர்கள், சிவில் மற்றும் ஸ்ட்ரக்சுரல் இன்ஜினீயர்கள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் வல்லுநர்கள், பிராப்பர்ட்டி டெவலப்பர்கள், கான்ட்ராக்டர்கள், கன்சல்டன்ட்கள் என ஆயிரக்கணக்கானோர் தமிழகம் முழுவதும் இருந்து வந்து பார்வையிடுகின்றனர்.

மேலும், பிரதம மந்திரியின் ஆவாஸ் யோஜனா திட்டத்தின் மூலம் ரூ.2.67 லட்சம் வரையிலும் மானியம் பெற வங்கிகள், வீட்டுக் கடன் நிறுவனங்களின் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இக்கண்காட்சி காலை 10.30 மணிக்கு தொடங்கி இரவு 8.30 வரை இடைவேளையின்றி நடக்கிறது.

இதில் அனைத்து தரப்பினரும் பங்கேற்று பயன்பெறுமாறு, பிஸினஸ் இந்தியா கண்காட்சி நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

யாருக்கும் தெரியாமல் நடந்த

மதுரை 'மாஸ்டர் பிளான்' கருத்துக்கேட்பு கூட்டம்

பொதுமக்கள், தொழில்முனைவோரிடம் கருத்து கேட்கப்படுமா?

● மதுரை

மதுரையில் நிறைவேற்றப்பட உள்ள 'மாஸ்டர் பிளான்' கருத்துக்கேட்பு கூட்டம், யாருக்கும் தெரியாமல் நடத்தப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பொதுமக்கள், தொழில்முனைவோர்கள், விவசாயிகளை அழைத்து கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.

மதுரை மாநகர் விரிவாக்கத்துக்கான 'மாஸ்டர் பிளான்' வரைவு திட்டத்துக்கு, தமிழக அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது. 3 நகராட்சிகள், 4 பேரூராட்சிகள், 316 ஊராட்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டு, மொத்தம் 147.97 சதுர கி.மீட்டராக நகர் எல்லை விரிவடைய உள்ளது.

மதுரை நகரில் 1994-ம் ஆண்டு பழைய 72 வார்டுகளுக்கு மாஸ்டர் பிளான் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆனால், மதுரை நகர் தொழில் உள்ளிட்ட எதிலும் வளர்ச்சி பெறவில்லை. குடியிருப்புகள் வர்த்தகப் பகுதிகளாக மாறி போக்குவரத்து நெரிசல், சிக்கல் ஏற்பட்டதுதான் மிச்சம்.

இதற்கு தீர்வாக, தற்போது 30 ஆண்டுகளுக்குப் பிறகு புதிய மாஸ்டர் பிளான் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இந்த திட்டத்தை சரியான முறையில் கடந்த காலத்தை போல் குளறுபடிகள் இல்லாமல் வெளிப்படையாக நிறைவேற்ற வேண்டும், என்று பொதுமக்கள், தொழில் முனைவோர் மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினர் மத்தியிலும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இந்நிலையில், நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 அடிப்படையில், புதிய மாஸ்டர் பிளான் திட்டத்தை மறுசீரமைப்பது குறித்த கருத்துக்கேட்பு கூட்டம் நேற்று மாடீசியாவில் நடந்தது. ஆனால், இந்த கூட்டம் குறித்து பத்திரிகையாளர்கள், தொழில்முனைவோர்கள், பொதுமக்களுக்கு வெளிப்படையாக தெரிவிக்கப்படவில்லை. இந்த கூட்டத்தை நகர் ஊரமைப்பு அதிகாரிகள் ரகசியமாக நடத்தி முடித்துள்ளனர். இதில் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மஞ்சு மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். இதுவரை நடந்த மாஸ்டர் பிளான் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்தான் நடத்தப்பட்டது. இதைக் கேள்விப்பட்ட தொழில் முனைவோர்கள், பொதுமக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

மேலும், யாருக்கும் தெரியாமல் தனியார் மண்டபத்தில் இந்த கூட்டத்தை நடத்துவதன் நோக்கம் என்ன? என்ற கேள்வியையும் எழுப்பினர்.

இதுகுறித்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மஞ்சுவிடம் கேட்டபோது, இந்த கூட்டத்தில் கட்டிட வல்லுநர்கள், பிளாட் புரோமோட்டர்கள், பொறியாளர்களை அழைத்து இருந்தோம். பொதுமக்களை அழைக்கவில்லை. பொதுமக்களையும் அழைத்து கருத்துக் கேட்போம் என்றார்.

நகரில் நடப்பவை

மதுரை

- கருத்தரங்கம்: மதுரை சமூக அறிவியல் கல்லூரி, காலை 9,
- 67-வது ஆண்டு விழா: தியாகராசர் நன்முறை மேனிலைப் பள்ளி, தெப்பக்குளம், காலை 10.
- மாசிமகம் தெப்பத் திருவிழா 8-ம் நாள்: கூடலழகர் கோயில், ஏகாந்த சேவை, காலை 9, குதிரை வாகன புறப்பாடு, இரவு 7.
- 18-வது அகில இந்திய மேலாண்மை தினம்: மதுரை மேனேஜ்மெண்ட் அசோசியேஷன், ஹோட்டல் அமிகா, ரிங் ரோடு, காலை 10.
- மொழி நாள் விழா, தமிழாய்வுத் துறை, மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி, காலை 10.30.
- சிறப்புக் கருத்தரங்கம், பொருளியல் மன்றம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, எழுமலை, காலை 9.30.
- நூல் வெளியீட்டு விழா: நினைவுகளின் நிலவெளி, வெளியிடுபவர்- திரைப்பட இயக்குநர் சுசி கணேசன், வன்னிவேலம்பட்டி, மாலை 5.

தேனி

- கருத்தரங்கம்: தேனி நாடார் சரஸ்வதி கலை கல்லூரி, ஏற்பாடு- வணிகவியல் நிர்வாகத் துறை, காலை 10.

வரி விளம்பரங்கள்
சுய செய்தி
பெயர்மாற்றம்

CHANGE OF NAME

I, M. KANNAMMAL, W/o. Subramanian, aged about 64 years, and residing at No.129/24, Neelakandan Kovil Street, Pasumpon Nagar, Palanganatham, Madurai South, Madurai shall henceforth be known as M.S.KANNAMMAL
Madurai 19.02.2024 M.KANNAMMAL

பொது
விற்பனை

CCTV CAMERA
எங்கிருந்தும் உங்கள் வீடு/ அலுவலகத்தை மொபைலில் பார்க்கலாம்

AN ISO 9001-2008 COMPANY
ஈஸிடெக் எலக்ட்ரானிக்ஸ்
இலவச டெமோவிற்கு அழைக்கவும்
74488 88901
95009 30200
www.easytechcctv.com

UJJIVAN SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: கதவு எண்.24, பழனி ரோடு, JCB மருத்துவமனை அருகில், நேருஜி நகர், திண்டுக்கல், தமிழ்நாடு-624001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	10.01.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை (EMD)
1602210120000013 1) Mr.தன்வீர் சுல்தான் S/o.அப்துல் ஜாபர் 2) Mrs.அமீனம்மாள் W/o.தன்வீர் சுல்தான்	(i) 17.07.2021 (ii) 16.07.2021 அன்றுள்ளபடி ₹ 25,26,976/- (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து இருபத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தாறு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 09.03.2022 & நேரடி சுவாதீனம் - 10.01.2024	₹ 38,47,911/- (ரூபாய் முப்பத்தெட்டு லட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து பதினொன்று மட்டும்)	₹ 31,50,000/- (ரூபாய் முப்பத்தொன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	₹ 3,15,000/- (ரூபாய் மூன்று லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்)

சொத்துக்கள் விவரம்: 1.திண்டுக்கல் பதிவு மாவட்டம், நாகல்நாயக்கன்பட்டி சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.560/1A & 560/1B வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு ஸ்ரீ கணபதி நகர் எனப் பெயரிடப்பட்டு, இதில் கிழக்கு பக்க மனை எண்.46. அளவுகள்: கிழக்கு மேற்காக இருபக்கமும் 20 அடி, வடக்கு தெற்காக இருபக்கமும் 40 அடி ஆகமொத்தம் 800 சதுர அடி அல்லது 74.32 சதுர மீட்டர் வீட்டு மனை மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், அதனுடன் அனைத்து இதர உரிமைகள். சொத்தானது தற்போது பட்டா எண்.6768, பாகம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.560/29A2-ல் 0.04.40 ஏர்ஸ், சர்வே எண்.560/30-ல் 0.03.11 ஏர்ஸ் ஆகமொத்தம் 0.07.51 ஏர்ஸ். எல்லைகள்: மேற்கு: மனை எண்.46 பகுதியின் மேற்கு பகுதி, தெற்கு: மனை எண்.53, வடக்கு: 20 அடி அகல கிழக்கு மேற்கு ரோடு. கிழக்கு: 23 அடி அகல வடக்கு தெற்கு ரோடு.

2. திண்டுக்கல் பதிவு மாவட்டம், நாகல்நாயக்கன்பட்டி சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.560/1A & 560/1B வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு, ஸ்ரீ கணபதி நகர் எனப் பெயரிடப்பட்டு, இதில் கிழக்கு பக்க மனை எண்.45 மற்றும் மேற்கு பக்க மனை எண்.46. எல்லைகள்: மேற்கு: மனை எண்.46-ன் மேற்கு பகுதி, தெற்கு: மனை எண்.54, 53, வடக்கு: 20 அடி அகல கிழக்கு மேற்கு ரோடு, கிழக்கு: மனை எண்.46-ன் கிழக்கு பகுதி. அளவுகள்: கிழக்கு மேற்காக இருபக்கமும் 10 அடி, வடக்கு தெற்காக இருபக்கமும் 40 அடி ஆகமொத்தம் 400 சதுர அடி. மேலும் மேற்கு பகுதி மனை எண்.46-ன் அளவுகள்: கிழக்கு மேற்காக இருபக்கமும் 10 அடி, வடக்கு தெற்காக இருபக்கமும் 40 அடி ஆகமொத்தம் 400 சதுர அடி ஆகமொத்தம் 800 சதுர அடி அல்லது 74.32 மீட்டர் வீட்டு மனை மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். சொத்தானது தற்போது பட்டா எண்.6768, பாகம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.560/29A2-ல் 0.04.40 ஏர்ஸ், சர்வே எண்.560/30-ல் 0.03.11 ஏர்ஸ் குடியிருப்பு மனை மற்றும் கட்டிடம், மற்றும் அனைத்து அனுமந்த உரிமைகள்.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 27.03.2024 காலை 10.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 26.03.2024 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 25.03.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.G.நடராஜன் - 81470 01897, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன் - 94455 08743 & Mr.R.புஷ்பகாந்த் - 98431 14222

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Vinod Chauhan Mob.No. 98138 87931) உத்தேச விலைக்குறிப்பிட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

தேதி: 21.02.2024
இடம்: பெங்களூர்
ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அமைப்படியில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.
படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

மழைநீர் உயிர்நீர்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
மழைநீரை சேகரிப்போம்
மறு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 502/ 2023-24

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மூலதன மான்ய நிதி (Phase VI) 2023-24 ன் கீழ், மண்டலம்-4, வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூர் பகுதியில் புதிதாக 10.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டும் பணியினை ரூ.203.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 12.03.2024 அன்று நடைபெறும் ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் E-submission முறையில் http://tntenders.gov.in என்ற இணையதளம் வழியாகவும், நேரிலும் 12.03.2024 மாலை 3.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 4.00 மணியளவில் திறக்கப்படும். எதிர்பாராத சூழ்நிலையில் அன்றைய தினம் அரசு விடுமுறை என அறிவிக்கப்பட்டால், அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு திறக்கப்படும்.
மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் நிபந்தனைகள் மேற்குறிப்பிட்டுள்ள இணைய தளத்தில் உள்ளது. முன்விளக்கக் கூட்டம் 05.03.2024 அன்று காலை 11.00 மணியளவில் ஆணையர் அவர்களின் கூட்ட அறையில் நடைபெறும். விவரங்கள் அறிய மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள பொறியியல் பிரிவில் அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
இ4/832/2024/மையம்
Visit us at www.trichycorporation.gov.in
செ.ம.தொ.இ/1104/ஒப்பந்தப்புள்ளி/2024
ஆணையாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

தமிழ்நாடு அரசு - நீர்வளத்துறை. மேல் காவிரி வடிநில வட்டம்.சேலம்
மொத்த விலை மற்றும் விலைவிதித ஒப்பந்தமுறை - மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை
குறுகியகால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.04/ வரி /அச 2 /கோ 275 /2023-2024/ மேல் காவிரி வடிநில வட்டம்/ சேலம்/நாள்.20.02.2024.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்தம் சார்பாகவும் மின்னணு ஒப்பந்தபுள்ளி (E-Tender) வழியாக உரிய வகுப்பில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த கட்டுமான பணிகள் மற்றும் பாசன பணிகளில் அனுபவம் பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து கண்காணிப்புப் பொறியாளர்.. (கூ/பொ) நீர்வள, மேல் காவிரி வடிநில வட்டம், சேலம் அவர்களால் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

| வ. எண். | வேலையின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (ஏற்கத் மற்றும் சேவை வரி 18% உட்பட, குறுகிய கிரைச்சித்தி) | முன்வைப்புத் தொகை மற்றும் செலுத்த வேண்டிய அனுவலவர் (ரூ) | ஒப்பந்த காலம் (மழைக் காலம் உட்